# யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

## பருத்தித்துறை

## வருடாந்த
## பரிசளிப்பு விழா அறிக்கை
## 2011 / 2012

## நிறுவன நோக்கக்கூற்று

" தரமான முகாமைத்துவத்தினூடாக
உன்னத கல்வியை வழங்கல்"

# நிறுவன பணிக்கூற்று

" எமது பாடசாலை மாணவர்கள் முழுமையான வினையாற்றலை எய்தும் பொருட்டு பாடசாலையின் வழங்கலில் உச்சப் பயன்பாட்டின் ஊடாக தரமான கல்விச் சூழலை உருவாக்கி நவீன உலகில் போட்டியிடும் வல்லமையும் மனித விழுமியங்களும் ஆளுமையும் ஜனநாயகப் பொறுப்பும் மிக்க மகிழ்ச்சி கரமானமாணவர் சமூகத்தை உருவாக்குவதன் மூலம் சர்வதேச தரத்தினை எய்துதல்"

School mail address:

admin@methodistgirls.org

## வருடாந்த பரிசளிப்பு விழா அறிக்கை 2011/2012

எமது பாடசாலையின் 2011/2012 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த பரிசளிப்பு விழா அறிக்கையை உங்கள் முன் சமா்ப்பிப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன். மாணவரின் கற்றல் கற்பித்தல் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் பண்புத்தரவிருத்தியினைக் குறிக்கோளாகக் கொண்டு இவ்விழா முன்னெடுக்கப்படுகின்றது. மாணவரின் சாதனை மட்டத்தை வலுப்படுத்தும் நோக்கில் இப் பரிசளிப்பு விழாவினை நடாத்த எமது பழைய மாணவா் சங்கங்கள் தமது பங்களிப்பினை திறம்பட வழங்கி வருகின்றன.

எமது பாடசாலையின் பழைய மாணவி திருவாட்டி றஞ்சிதமலா் பிறேமகாந்தன், தனது துணைவரும் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளருமாகிய உயா்திரு. கு. பிறேமகாந்தன் (S.L.E.A.S I) அவா்களுடன் இன்றைய நிகழ்வில் கலந்து சிறப்பிப்பது மிகவும் பெருமையைத் தருகின்றது. ENReP நிறுவன அனுசரணையுடன் கட்டப்பட்ட புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறும் இன்றைய பரிசளிப்பு விழா வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக அமைந்துள்ளது.

### பாடசாலையின் முகாமைத்துவம்

| | |
|---|---|
| தரம் 6 -11 | 772 |
| தரம் 12 -13 | 488 |
| மொத்தம் | 1260 |

### ஆசிரியா் தொகை

| | |
|---|---|
| பட்டதாரி ஆசிரியா்கள் | 29 |
| பயிற்றப்பட்ட ஆசிரியா்கள் | 20 |
| தற்காலிக இணைப்பில் உள்ளோா் | 01 |

| | |
|---|---|
| தொண்டர் ஆசிரியர்கள் | 02 |
| கல்விசாரா ஆளணி | 02 |
| கல்விசாரா ஆளணித் தேவை | 03 |

கடந்த வருடம், எமது பாடசாலையின் ஆசிரியர்களில் கலைப்பட்டதாரி ஆசிரியர்களான செல்வி ஜீவதுளசி சின்னத்தம்பி (நாடகமும் அரங்கியலும்) , செல்வி விஜிதா தங்கவேலாயுதம் ( தமிழ் சிறப்பு ), செல்வி சௌந்தர்யமலர் இராஜேந்திரம் (கிறிஸ்தவம் சிறப்பு) செல்வி அம்பிகை வேலும்மயிலும் (புவியியல்) ஆகியோர் வன்னி மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்ற பின் எமது பழைய மாணவிகளின் உதவியுடன் தமிழ், புவியியல், நாடகமும் அரங்கியலும், புவியியல் (ஆங்கில மொழிமூலம்) போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

எமது பாடசாலையின் பகுதித்தலைவர் திருமதி வசந்தாதேவி வேலும்மயிலும் அவர்கள் தனது 27 வருட சேவையின் பின் 29.05.2011அன்று இளைப்பாறியுள்ளார். பாடசாலையின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கும் க.பொ.த உயர்தர வர்த்தகப் பிரிவின் வளர்ச்சிக்கும் தனது ஒத்துழைப்பை நல்கிய இவர் சிறந்த பொருளியல் ஆசிரியராகவும் தனது கடமையைச் சிறப்பாகச் செய்தவர். ஓய்வு காலத்தில் அவர் தம் கணவர், பிள்ளைகளுடன் சுகமே வாழ இறைவனை இறைஞ்சுகின்றேன்.

திருமதி லீ. கணேசலிங்கம் பயிற்றப்பட்ட மனையியல் ஆசிரியர் 05.10.2011இல் ஓய்வுபெற்றுள்ளார். இவரது இடம் இதுவரை வெற்றிடமாகவே உள்ளது. இவர் சுயவிருப்பின் பேரில் பெருவிளையாட்டுகளில் ஒன்றான பூப்பந்தாட்ட விளையாட்டு பயிற்சியாளராக தொடர்ந்தும் கடமை புரிந்து, இவ்வருடம் எமது பாடசாலை 15 வயதுப் பிரிவினரும், 19 வயதுப் பிரிவினரும்

வலயமட்டத்தில் **1ம் இடத்தைப் பெற்று** 15 வயதுப் பிரிவினர் மாவட்டத்திலும், மாகாணமட்டத்திலும் 1ம் இடத்தைப் பெற்று சிறந்த பூப்பந்தாட்ட குழுவாக மாகாணமட்டத்திலும் வெற்றி பெற இன்றும் பூரண ஆதரவை வழங்கிக்கொண்டிருக்கின்றார். இவரது சேவைக்கு எமது சமூகம் சார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

பட்டதாரி ஆசிரியர்களான செல்வி மீ. பாலச்சந்திரன் (வர்த்தகம்) திருமதி சு. சஞ்சியகாந் (கலை), பயிற்றப்பட்ட ஆசிரியர்களான திருமதி ற. ராஜ்குமார் (சங்கீதம்), திருமதி.வ. மனோகரன் (விஞ்ஞானம்) திருமதி. ம. செல்வகுமார் (விஞ்ஞானம்) திருமதி ஆன்வினித்தா அன்ரன் உதயகுமார் (கிறிஸ்தவம்), ஆகியோர் எம்முடன் இணைந்து கொண்டனர்.இவர்களுடன் வருட இறுதியில் நுண்கலைப் பட்டதாரி ஆசிரியர்களான திருமதி. பி. டேவிட்ராஜ், திருமதி. சி. சந்திரராசா ஆகியோரும் இணைந்தனர்.

பாடசாலை வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுடன் காரியாலயமுறைமையும், கல்விசாரா ஆளணியின் சேவையும் மிகச்சிறப்புடன் இருக்கும் பொழுதுதான் வினைத்திறன் உள்ள செயற்பாட்டை எம்மால் உருவாக்க முடியும். கல்விசாரா ஆளணிப் பற்றாக்குறை இருந்த பொழுதும் மிகத் தொலைதூரத்திலிருந்து எம்மை நாடி வந்து கல்வி கற்கும் மாணவர்களுக்கு விடுகைப்பத்திரங்கள், பல்வேறு விதமான புலமைப்பரிசில்கள், பருவகாலச்சீட்டு வழங்குதல் போன்ற செயற்பாடுகளை ஆசிரியர்கள் முன்வந்து நிறைவேற்றுகின்றனர்.

## <u>பௌதீக வளம்</u>

பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து மாணவர்களுக்குரிய சிறப்பான கல்விநிலையை உருவாக்குவதற்குக் கடந்த வருடம் போன்று 2011 இலும் பல வேலைத்திட்டங்கள்

முன்னெடுக்கப்பட்டுள்ளன. D.S.D திட்டத்தின் மூலம் வகுப்பறைகளுக்கு வர்ணம் பூசப்பட்டது. 2011.06.10 – 2011.06.17 வரை நவோதய வாரம் கொண்டாடப்பட்ட வேளை பெற்றோர்களும், மாணவர்களும் இராணுவத்தினரும் இணைந்து போரினால் சிதைவுடைந்த எமது பாடசாலையின் சுற்றுப்புறச் சூழலைத் துப்பரவு செய்தனர். பல்வேறு விதமான கற்றல் உபகரணங்கள் D.S.D திட்டத்தின் மூலமும் கல்வித்திணைக்களம் மூலமும் வழங்கப்பட்டுள்ளன.

## கல்விச்செயற்பாடு

1. வருடாந்த நேரசூசிக்கு அமைவாக பாடத்திட்ட வேலைத் திட்டங்களுடன் இணைந்த வகையில் சிறப்பான கற்பித்தல் முறை பயன்படுத்தப்படுகிறது.
2. பாடசாலையின் கவிநிலையை மேம்படுத்தி மாணவர் மையக்கல்வி நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
3. வகுப்பறைக் கற்பித்தலில் புதிய தொழில்நுட்பங்களின் கூடிய கற்பித்தல் நுட்பங்கள் கையாளப்படுகின்றன.
4. ஆசிரியரது தரக் கணிப்பீட்டின் மூலமும் சிறந்த கற்றல் முறைகள் ஊக்குவிக்கப்படுகின்றன.
5. மாணவர்களது திறன் மேம்பாட்டுக்கும் ஆசிரியரது வாண்மை விருத்திக்கும் பாடசாலை மட்டத்தில் உயர்கல்விச் செயற்பாட்டு நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.
6. மாணவர் உயர்நிலைக் கற்றலை மேம்படுத்தும் கற்றல் கற்பித்தல் வளங்களின் பயன்பாட்டில் தரமான உள்ளீடுகள் பயன் படுத்தப்படுகின்றன.
7. மாணவர்களது அடைவுமட்டத்தை உயர்த்துவதற்கு ஏற்ற வகையில் பின்னூட்டல்கள் உரிய வேளையில் வழங்கப்படுகின்றன.

8. பாடசாலையை மையப்படுத்தி ஆசிரியர் வாண்மை விருத்திக்கு ஏற்ற வகையிலும் ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது

**சமயக்கல்வி**

எம்மாணவர்கள் வையத்தில் வாழ்வாங்குவாழ எமது பாடசாலை இந்து, கிறிஸ்தவ மன்றங்கள் உதவிவருகின்றன. மாணவர்களை ஆன்மீக ஈடுபாட்டில் வழிப்படுத்தும் நோக்கில் வெள்ளிக்கிழமைகளில் கிறிஸ்தவமன்றத்தினர் தமது பிரார்த்தனை மண்டபத்தில் விசேட வழிபாடுகளுடன் கூடிய பிரார்த்தனைகள், பிரசங்கங்களை நடாத்துகின்றனர். காலைப் பிரார்த்தனையின் பின் நற்சிந்தனை மற்றும் பத்திரிகைச் செய்திகள் மூலம் மாணவர்களது ஆளுமைப்பண்பு வளர்க்கப்படுகின்றது. வருடாந்தம் நவராத்திரி, சிவராத்திரி நிகழ்வுகளை இந்துமன்றம் சிறப்பாகக் கொண்டாடுகின்றது. வருடாவருடம் சிவராத்திரி தினத்தில் பசுபதீஸ்வரர் ஆலயத்தில் எமது பாடசாலை மாணவர்களது இசைக்கச்சேரி நடாத்துவதற்கு இந்துமன்றம் அனுசரணை வழங்குகின்றது. கிறிஸ்தவ மன்றமும் ஈஸ்ரர், நத்தார் போன்றவற்றுடன் மெதடிஸ்த தின விழாவை ஆனி 29ல் கொண்டாடுகின்றது.

**பொதுக்கல்வி**

கடந்த வருடம் க.பொ.த சாதாரண பரீட்சையில் எம் மாணவர்கள் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றுள்ளனர். க.பொ.த உயர்தரப் பரீட்சையில் முதன் முதலில் ஆங்கில மொழிமூலம் தோற்றி அனைத்து மாணவர்களும் நூறுவீதம் சித்தியைப் பெற்று எமது பாடசாலைக்கும் வடமராட்சி வலயத்திற்கும் பெருமை தேடித்தந்துள்ளனர். உயிரியல், இரசாயனவியல் போன்ற பாடங்களை ஆங்கில மொழிமூலம் கற்பிப்பதற்கு எமக்கு ஆசிரியர்கள் தேவையாக உள்ளனர். எமக்கு கடந்த நான்கு வருடங்களாக க.பொ.த உயர்தரத்தில்

இரசாயனவியல் பாடத்தினைக் ஹாட்லிக் கல்லூரியின் முன்னை நாள் பதில் அதிபர் திரு. ந. குணசீலன் அவர்கள் எந்தவிதமான வேதனமுமின்றி கற்பித்து வருகின்றார். அவரது சேவைக்கு எம் பாடசாலைச் சமூகம் என்றென்றும் கடமைப்பாடுடையது.

க.பொ.த சாதாரணதர (2011) மாணவர்கள் 93.7% தேர்ச்சியையும் க.பொ.த உயர்தர (2011) மாணவர்கள் 79% சித்தியையும் பெற்றுள்ளனர்.

**2011 ஆம் ஆண்டு க.பொ.த ( சா.தர) பெறுபேறு**

| | தமிழ் மொழிமூலம் | ஆங்கிலமொழிமூலம |
|---|---|---|
| தோற்றியோர் | 94 | 21 |
| சித்தியடைந்தோர் | 88 | 21 |
| சித்தி வீதம் | 93.7% | 100% |

**உயர் பெறுபேறு பெற்றோர் விபரம்**

| | தமிழ்மொழி மூலம் | ஆங்கிலமொழி மூலம் |
|---|---|---|
| 9A | 06 | 02 |
| 8A | – | 01 |
| 7A | 01 | 02 |
| 6A | 03 | 01 |
| 5A | 03 | 04 |

**9A பெற்றவர் விபரம்**

1. செல்வி.அனோஜா அருளானந்தம் ஆங்கில மொழிமூலம்
2. செல்வி.சயித்தா செல்வலிங்கம் ஆங்கில மொழிமூலம்
3. செல்வி.அபிநயா சண்முகேஸ்வரன் தமிழ்மொழிமூலம்
4. செல்வி.வாகினி சிவகுமாரன் தமிழ்மொழிமூலம்
5. செல்வி. சுதேசனா சூரியகுமாரன் தமிழ் மொழிமூலம்
6. செல்வி. கார்த்திகா தர்மதாயளன் தமிழ் மொழிமூலம்

7. செல்வி. வேணுஜா தவகுலரட்ணம் தமிழ் மொழிமூலம்
8. செல்வி. அகல்யா வைத்திலிங்கம் தமிழ் மொழிமூலம்

**8A பெற்றவர்**

1. செல்வி. ஆர்த்திகா கலைச்செல்வன் ஆங்கில மொழிமூலம்

**7A பெற்றவர் விபரம்**

1. செல்வி. யசிதா சற்குருநாதன் ஆங்கில மொழிமூலம்
2. செல்வி. லினோஜா கனகசபாபதி ஆங்கில மொழிமூலம்
3. செல்வி. சர்மிளா சற்குணராஜா தமிழ் மொழிமூலம்

**6A பெற்றவர் விபரம்**

1 செல்வி. பிரியங்கா இளங்கோ ஆங்கில மொழிமூலம்
2. செல்வி. நிவேதினி தங்கராஜா தமிழ் மொழிமூலம்
3. செல்வி. ஜஸ்வர்யா சபாநாதசர்மா தமிழ் மொழி மூலம்
4. செல்வி. மேரிபவுஸ்ரீனா எட்மன்றெஜி தமிழ் மொழிமூலம்

**5A பெற்றவர் விபரம்**

1. செல்வி. மாதுரி மதியழகன் ஆங்கில மொழிமூலம்
2. செல்வி. விதுசனா தங்கராஜா ஆங்கில மொழிமூலம்
3. செல்வி. தர்சிகா பிறேமகாந்தன் ஆங்கில மொழிமூலம்
4. செல்வி. கௌசிகா சிவராசா ஆங்கில மொழிமூலம்
5. செல்வி. கர்சிஹா ரசீதரன் தமிழ் மொழி மூலம்
6. செல்வி. சுஜிதா குணராசன் தமிழ் மொழிமூலம்
7. செல்வி. மதுஷா மகேந்திரராசா தமிழ் மொழிமூலம்

க.பொ.த உயர்தர பெறுபேறு 2011

| விபரம் | கணிதம் | உயிரியல் | வர்த்தகம் | கலை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தோற்றியோர் | 14 | 29 | 22 | 63 | 128 |
| சித்தியடைந்தோர் | 09 | 22 | 16 | 56 | 103 |
| பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்றோர் | 09 | 22 | 16 | 56 | 103 |

க.பொ.த உயர்தரம் 2011 இல்

உயர் பெறுபேறு பெற்றோர் விபரம்

| | |
|---|---|
| 3A | 03 |
| 2AB | 05 |
| 2AC | 01 |
| A2B | 02 |

**3A** பெற்றவர்கள் விபரம்

01. செல்வி ஜோயினி சிவஞானச்செல்வம் உயிரியல்
02. செல்வி நவராணி கிருஷ்ணமூர்த்தி கலை
03. செல்வி அகல்யா ஈஸ்வரன் கலை

**2A B** பெற்றவர்கள் விபரம்

01. செல்வி ஜோதினி செல்வானந்தம் உயிரியல்
02. செல்வி சயந்தினி பரமானந்தம் கலை
03. செல்வி சோபனா மாட்டின் செல்வநாயகம் கலை
04. செல்வி ஜெபஅருள்நிரோஜினி ஆரோக்கியநாதர் கலை
05. செல்வி தர்சிகா பத்மநாதன் கலை

**2A C** பெற்றவர்கள் விபரம்

01. செல்வி வினோதா பரமானந்தம் வர்த்தகம்

**A 2B பெற்றவர்கள் விபரம்**

01. செல்வி மேனகா அரியநாயகம் உயிரியல் (ஆங்கிலமொழி)
02. செல்வி மாதினி சூரியஜெயா கலை

**புலமைப்பரிசில்**

பல்கலைக்கழக அனுமதிக்காக 1ம் தடவை தோற்றி விஞ்ஞான மாணவிக்குரிய பழைய மாணவி இந்திராணி பாஸ்கரன் புலமைப்பரிசில் பெறும் மாணவி செல்வி ஜோயினி சிவஞானச்செல்வம் (மருத்துவம்)

கொழும்பு பழையமாணவர் சங்கம் வழங்கும் முன்னாள் அதிபர் தேவமலர் அரியரட்ணம் புலமைப் பரிசில் பெறும் மாணவர் விபரம்

| மாணவர் விபரம் | தரம் |
|---|---|
| 01. செல்வி தனுயா ஜெயக்குமார் | 6 |
| 02 செல்வி யதுர்சனா ஜெயராசா | 7 |
| 03. செல்வி லக்சனா ரட்ணமெலேனியஸ் | 8 |
| 04. செல்வி வினுயா நாகேந்திரன் | 9 |
| 05. செல்வி பிரியதர்சினி அன்னலிங்கம் | 10 |
| 06. செல்வி மஞ்சுளா துரைரட்ணம் | 11 |
| 07. செல்வி கிருந்திகா ரவீந்திரன் | 11 |
| 08. செல்வி ரஜீனா சிவசண்முகம் | 12 |
| 09. செல்வி கௌசிகா சிவராசா | 12 |

பல்கலைக் கழக அனுமதி பெற்ற கொழும்பு பழைய மாணவர் சங்க புலமைப்பரிசில் பெறும் மாணவி
செல்வி ஜோதினி செல்வானந்தம்

**கனடா பழைய மாணவர் சங்க புலமைப்பரிசில் பெறுபவர் விபரம்**

முன்னாள் அதிபர் றோஸ்மேரி சின்னையா ஞாபகார்த்த புலமைப்பரிசு பெறும் சிறந்த கணிதப் பிரிவு மாணவி செல்வி பகீரதி நடராஜா.

முன்னாள் அதிபர் செல்வி மனோரஞ்சிதம் ஆறுமுகம் ஞாபகார்த்த புலமைப்பரிசு பெறும் கலைப்பிரிவு மாணவி செல்வி நவராணி கிருஷ்ணமூர்த்தி

முன்னாள் அதிபர் செல்வி R.J மான் ஞாபகார்த்த புலமைப் பரிசு பெறும் வர்த்தகப்பிரிவு மாணவி

செல்வி. வினோதா பரமானந்தனம்

முன்னாள் அதிபர் திருமதி தேவமலர் அரியரட்ணம் ஞாபகார்த்த புலமைப்பரிசு பெறும் பல்கலைக்கழகம் செல்லும் கணிதப்பிரிவு மாணவி எவருமில்லை

- முன்னாள் சிரேஷ்ட மாணவத் தலைவி செல்வி பத்மினி தேவி இராசேந்திரம் (1963/1964 ) ஞாபகார்த்த புலமைப் பரிசுபெறும் பல்கலைக்கழகம் செல்லும் மாணவி கலைப்பிரிவு மாணவி

  1. செல்வி . சயந்தினி பரமானந்தம்
  2. செல்வி . தர்சினி பத்மநாதன்

  இதனை வழங்குபவர் கனடாவில் வசிக்கும் இவரது சகோதரியான செல்வி ஜெயதேவி நாகேந்திரன்

- பழையமாணவி செல்வி திலகவதி பெரியதம்பி வழங்கும் புலமைப்பரிசு பெறும் சிறந்த விஞ்ஞானப்பிரிவு மாணவி செல்வி ஜோயினி சிவஞானச்செல்வம்

- முன்னாள் பிரதிஅதிபர் செல்வி சுப்பிரமணியம் ஞாபகார்த்த புலமைப்பரிசு பெறும் கணிதப்பிரிவு மாணவி செல்வி பகீரதி நடராஜா

- ❖ முன்னாள் பிரதிஅதிபர் திருமதி. குணமணி இராஜரட்ணம் ஞாபகார்த்த கிறீஸ்தவ பாடப் புலமைப்பரிசு பெறும் மாணவி. செல்வி. சோபனா மாட்டின் செல்வநாயகம்
- ❖ முன்னாள் வர்த்தக ஆசிரியர் திரு. அ. தேவச்சந்திரன் ஞாபகார்த்த புலமைப்பரிசில் பெறும் பல்கலைக்கழகம் செல்லும் மாணவி செல்வி தமிழ்மதி குலசேகரம். இதனை வழங்குபவர் திரு.திருமதி தேவச்சந்திரன் அவர்களின் புதல்வி திரு. திருமதி மஞ்சுளா யோகேந்திரம்
- ❖ முன்னாள் அதிபர் திருமதி லீலாவதி சந்திரசேகரம் அவர்களால் வழங்கப்படும் வெற்றிக் கேடயங்களைப் பெறும் சகலதுறை மாணவிகள்

01. செல்வி விதுசனா தங்கராஜா - க.பொ.த சாதாரணம்
02. செல்வி நிலுக்ஷி புவனேந்திரன் - க.பொ.த உயர்தரம்
03. செல்வி. மாதங்கி கணேசலிங்கம் - க.பொ.த. உயர்தரம்

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவிகள்

04. ஜோயினி சிவஞானச் செல்வம் ( விஞ்ஞானம் )
05. வினோதா பரமானந்தம் ( வர்த்தகம் )
06. பகீரதி நடராசா ( கணிதம்
07. நவராணி கிருஷ்ணமூர்த்தி (கலை)

## இணைப்பாடவிதான செயற்பாடுகள்

### விளையாட்டு

கடந்த வருடமும் எமது மாணவர்கள் பெருவிளையாட்டுகளில் தேசிய மட்டம் வரை கலந்துகொண்டனர். மாகாண மட்டத்தில் சாதனை புரிந்தவர்கள் கடந்தவருடமும்

பரிசளிப்பு நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். இதற்கான நிதிஉதவியினை எமது முன்னாள் ஆசிரியர் ஜோன் பிள்ளை ஞாபகார்த்தமாக அவரது மகள் செல்வி நேரா ஜோன்பிள்ளை வழங்கி உதவியுள்ளார். இவ்வருடமும் அவரது நிதியால் மாகாணமட்ட சாதனை மாணவிகள் கௌரவிக்கப்படுகின்றனர்.

வடமாகாண 23 நவோதய பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு போட்டியில் எம் பாடசாலையும் பங்குபற்றி மொத்தமாக 54 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தை பெற்றுக்கொண்டது.

**இப் போட்டியில்**

| | | |
|---|---|---|
| கரப்பந்தாட்டம் | 19வயதுப் பிரிவினர் | 1ம் இடம் |
| வலைப்பந்தாட்டம் | | 1ம் இடம் |
| அஞ்சலோட்டம் | 15 வயதுப்பிரிவு 4 X 100m | 1ம் இடம் |
| | 19 வயதுப்பிரிவு 4 X 100m | 1ம் இடம் |

**மெய்வல்லுனர் விளையாட்டுக்கள்**

**13 வயதுப் பிரிவினர்**

| | வலய மட்டம் | மாவட்ட மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| 01. செல்வி.கு. ரூபிகா100m | 3rd | - | - |
| 4 X 100m | 2nd | 3rd | - |

**15 வயதுப் பிரிவினர்**

| | வலய மட்டம் | மாவட்ட மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| 01. செல்வி. ஜெ.பிரதீபா100m Hurdle | 3rd | - | - |

## 17 வயதுப் பிரிவினர்

| | வலய மட்டம் | மாவட்ட மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| 01. செல்வி. த.விதுசனாDiscus | 2nd | 2nd | 2nd |
| 02. செல்வி.இ. நளாயினி100m Hurdle | 1st | - | - |
| 200m | 1st | - | - |
| 03. செல்வி. ஸ்ரீ. மகிழினி LongJump | 2nd | - | - |
| Triple Jump | 2nd | 2nd | - |
| அஞ்சலோட்டம் 400m | 1st | - | - |
| 4 X 100m | 3rd | 1st | 1st |
| 4 X 400m | 2nd | 1st | 1st |

## 19 வயதுப் பிரிவினர்

| | வலய மட்டம் | மாவட்ட மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| 01. செல்வி. ப.மேரிலிப்பின்ஜெரினா 800m | 1st | - | - |
| 1500m | 1st | - | - |
| 5000m | 1st | - | - |
| 02. செல்வி. ச. யானகி Javalin | 1st | 1st | 1st |
| High Jump | 2nd | - | - |
| 03. செல்வி. து. பானுஷா Discus | 1st | 1st | 1st |
| 04. செல்வி. சி. ஜெனார்த்தனி Shot put | 1st | 2nd | |
| 05. செல்வி. சி. கீர்த்தனா . 100m | 1st | - | - |
| 06. அஞ்சலோட்டம் 200m | 1st | - | - |
| 400m | 1st | - | - |
| 07. செல்வி. அ. அன்பேந்தினி 100m | 3rd | - | - |
| 200m | 2nd | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | 400m | 2nd | - | - |
| 04. செல்வி. பு. சியாமி | Lonh Jump | 1st | - | - |
| | Triple Jump | 3rd | - | - |
| செல்வி . சி. கீர்த்தனா | 4 X 100m | 1st | 3rd | 1st |
| செல்வி. வே. நிரஞ்சனி | | - | - | - |
| செல்வி. அ. அன்பேந்தினி | | - | - | - |
| செல்வி. ப. மேரிலிப்பின் ஜெரினா | | - | - | - |
| அஞ்லோட்டம் | 4 X 400m | 1st | - | - |

21 வயதுப் பிரிவினர்

| | | | வலய மட்டம் | மாவட்ட மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|---|---|
| 01. | செல்வி. மா. சோபனா | 100m | 2nd | - | - |
| | | Longjump | 2nd | - | - |
| | | Triple Jump | 1st | - | - |
| 02. | செல்வி. ஸ்ரீ. புவிதா | 200m | 2nd | - | - |
| | | 400m Hurdle | 1 st | - | - |
| 03. | செல்வி. ர. யாழினி | 1500m | 2nd | - | - |
| 04. | ெல்வி. த. லக்ஷனா | Shot Put | 2nd | - | - |
| 05. | செல்வி. சி. பாமினி | 400m | 3rd | - | - |
| | | 100m Hurdle | 2nd | - | - |
| | | 400m Hurdle | 2nd | - | - |
| | அஞ்சலோட்டம் | 4 X 100m | 2nd | - | - |
| | | 4 X400m 2nd | | - | - |

| வலைப்பந்தாட்டம் | வலய மட்டம் | மாவட்ட மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| **Under 15** | 2nd | - | - |
| **Under 17** | 2nd | - | - |
| **Under 19** | 2nd | - | - |

| கரப்பந்தாட்டம் | வலய மட்டம் | மாவட்ட மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| **Under 15** | 1st | - | - |
| **Under 17** | 1st | 2nd | - |
| **Under 19** | 1st | 1st | 1st |

| எல்லே | வலய மட்டம் | மாவட்ட மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| **Under 19** | 1st | 2nd | 2nd |

| மென்பந்தாட்டம் | வலய மட்டம் | மாவட்ட மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| **Under 19** | 2nd | 3rd | 2nd |

| பூப்பந்தாட்டம் | வலய மட்டம் | மாவட்ட மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| **Under 19** | 1st | 3rd | - |

| கரம் | வலய மட்டம் | மாவட்ட மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| **Under 15** | 3rd | - | - |
| Under 19 | 2nd | - | - |

| | | | |
|---|---|---|---|
| | வலய | மாவட்ட | மாகாண |
| உடற்பயிற்சிப் போட்டி | மட்டம் | மட்டம் | மட்டம் |
| **Under 19** | 2nd | - | - |
| | வலய | மாவட்ட | மாகாண |
| சதுரங்கம் | மட்டம் | மட்டம் | மட்டம் |
| **Under 15** | 2nd | 1st | 1st |
| | வலய | மாவட்ட | மாகாண |
| மேசைப்பந்து | மட்டம் | மட்டம் | மட்டம் |
| **Under 19** | 2nd | - | - |
| | வலய | மாவட்ட | மாகாண |
| கபடி | மட்டம் | மட்டம் | மட்டம் |
| **Under 19** | 3rd | - | - |

## மொழித்திறன்

## தமிழ்மொழித்தினப் போட்டி 2011

கடந்த வருடமும் எமது பாடசாலை மாணவர்கள் தமிழ்மொழித்தின போட்டியில் கோட்டமட்ட, வலயமட்ட, மாகாணமட்டங்களில் பங்குகொண்டனர். அதே போன்று ஆங்கில தின போட்டியில் வலயமட்டத்திலும், மாகாணமட்டத்திலும் பங்கு கொண்டு தேசிய மட்டத்திலும் பங்கு கொண்டனர்.

### வலயமட்டம்

| | | |
|---|---|---|
| செல்வி பி. கேதாரணி | கட்டுரைவரைதல் | 3ம் இடம் |
| செல்வி ம. மிதுஷா | சிறுகதைஆக்கம் | 2ம் இடம் |
| செல்வி சி. வைஸ்ணவி | பேச்சு | 1ம் இடம் |
| செல்வி ஜெ. யதுர்ஷனா | பாஓதல் | 1ம் இடம் |
| செல்வி அ. கஜேந்தினி | பாஓதல் | 1ம் இடம் |
| செல்வி கோ. அருட்செல்வி | வாசிப்பு | 2ம் இடம் |

| | | |
|---|---|---|
| செல்வி ஜெ. கிசோதா | தனி இசை | 3ம் இடம் |
| செல்வி க. நிரோஜினா | தனி நடனம் | 3ம் இடம் |
| செல்வி அன்சுகா | தனி நடனம் | 3ம் இடம் |

மாவட்டமட்டம்

| | | |
|---|---|---|
| செல்வி சி. வைஸ்ணவி | பேச்சு | 2ம் இடம் |
| செல்வி ஜெ. யதுர்ஷனா | பாஓதல் | 3ம் இடம் |
| செல்வி அ. கஜேந்தினி | பாஓதல் | 3ம் இடம் |

**சமூக விஞ்ஞானப் போட்டி - தமிழ் மொழி மூலம்**

| | வலயமட்டம் | மாகாணமட்டம் |
|---|---|---|
| செல்வி. சி. வைதேகி | 1ம் இடம் | - |
| செல்வி. செ. சோபிகா | 1ம் இடம் | 3ம் இடம் |

**சமூக விஞ்ஞானப் போட்டி – ஆங்கில மொழி மூலம்**

| | வலயமட்டம் | மாகாணமட்டம் |
|---|---|---|
| செல்வி. பா. ஆரணி | 3ம் இடம் | _ |
| செல்வி. இ. பொன்னரசி | 2ம் இடம் | 3ம் இடம் |
| செல்வி. பா. இலக்சனா | 3ம் இடம் | _ |
| செல்வி. க. லினோயா | 2ம் இடம் | 3ம் இடம் |

**கணித புதிர் போட்டி**

சுஜீவா சிறீபவன் தரம் 09 ஆங்கிலமொழிமூலம் தோற்றி, வலயமட்டத்தில் 3ம் இடத்தைப் பெற்றதுடன், கோபிகா வேணுகோபால வாணிதாசன் தரம் 10 தமிழ்மொழி மூலம் தோற்றி, வலயமட்டத்தில் 3ம் இடத்தையும், மாகாணமட்டத்தில் 2ம் இடம் பெற்று தேசியமட்ட வடமராட்சி வலயக் குழுவில் தெரிவு செய்யப்பட்டார்.

விஞ்ஞானப் புதிர் போட்டி – ஆங்கில மொழி மூலம்

| | வலயமட்டம் | மாகாணமட்டம் |
|---|---|---|
| செல்வி. கு. நிதுஷா | 3ம் இடம் | _ |
| செல்வி. கு. துஷ்யந்தி | 1ம் இடம் | _ |
| செல்வி. சி. பவுனா | 1ம் இடம் | _ |

விஞ்ஞானப் புதிர் போட்டி – தமிழ் மொழி மூலம்

| | வலயமட்டம் | மாகாணமட்டம் |
|---|---|---|
| செல்வி. சி. சாமினி | 3ம் இடம் | _ |
| செல்வி. பா. மயூரிகா | 3ம் இடம் | _ |
| செல்வி. சி. சிந்துஜா | 3ம் இடம் | 3ம் இடம் |

திருக்குறள் மனனப் போட்டி

| | வலயமட்டம் | மாகாணமட்டம் |
|---|---|---|
| செல்வி. ச. பிருந்தா | 3ம் இடம் | _ |

## பொதுப்போட்டிப் போட்டிகள்

பன்மைத்துவ கலாசாரத்தினூடாக சமாதானம்

கவிதை

| | கோட்டமட்டம் | வலயமட்டம் |
|---|---|---|
| செல்வி. சி. சிந்துஜா | 1ம் இடம் | 1ம் இடம் |
| செல்வி. ம. மாதுரி | 1ம் இடம் | 1ம் இடம் |

**வணிகப்போட்டி**

செல்வி. சாரங்கா 1ம் இடத்தைப் பெற்றார்

**வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட முதியோர் தின விழா**

**பேச்சு**

| | | |
|---|---|---|
| செல்வி. க. பிரசாந்தி | 1ம் இடம் |
| செல்வி. செ. ஆன்சிந்துஜா | 3ம் இடம் |
| செல்வி. தி. கனிமொழி | 1ம் இடம் |
| செல்வி. லோ. யசோதா | 4ம் இடம் |

**திருக்குறள் மனனப் போட்டி**

தரம் 06 மாணவி செல்வி யதுர்சனா ஜெயராசா சைவபரிபாலனசபை நடாத்திய திருக்குறள் மனனப்போட்டியில் 1ம் இடத்தைப்பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.

**வடமராட்சிப் பிரதேச இலக்கியப் போட்டி**

| | | |
|---|---|---|
| செல்வி. ச. தீபிகா | கட்டுரை | 2ம் இடம் |
| செல்வி. ப. கௌசிகா | கவிதை | 3ம் இடம் |
| செல்வி. க. லக்ஷனா | சிறுகதை | 1ம் இடம் |

**தேசிய பாதுகாப்பு தின விழா**

**கட்டுரை**

செல்வி. ந. சிந்துஜா 2ம்இடம் ( ஆங்கில மொழி மூலம் )

செல்வி. V. கயாளினி 2ம் இடம் ( தமிழ் மொழி மூலம் )

செல்வி. K. மாதுமை 3ம் இடம் ( தமிழ் மொழி மூலம் )

கடந்த வருடம் **தினக்குரல் பத்திரிகையினால்** நடாத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் எமது மாணவர்கள் பங்கு கொண்டு பல பரிசில்களை வெற்றி பெற்றக்கொண்டனர்.

13 வயதுப் பிரிவினர்

| | | |
|---|---|---|
| 1. | கு. துஸ்யந்தினி | 1ம் இடம் |
| 2. | இ. ராஜினி | 3ம் இடம் |
| 3. | லோ. சாம்பவி | 4ம் இடம் |
| 4. | கு. மாதங்கி | 6ம் இடம |

15 வயதுப் பிரிவினர்

| | | |
|---|---|---|
| 01. | சூ. புவித்தா | 1ம் இடம் |
| 02. | பு. துளசிகா | 5ம் இடம் |
| 03. | நா. ரம்யா | 6ம் இடம் |
| 04. | கு. மாதுமை | 7ம் இடம் |
| 05. | இ. திவேந்தினி | 9ம் இடம் |
| 06. | தே. மயூரி | 10ம் இடம் |

17வயதுப் பிரிவினர்

| | | |
|---|---|---|
| 01. | வே. நிதர்சனா | 1ம் இடம் |

ஆங்கில தினப்போட்டி

**Copy writing** ( பார்த்தெழுதல் )

| | | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| 01. | செல்வி. க. ஆர்த்திகா | 3rd | - |
| 02. | செல்வி. த. விதுஷனா | 3rd | - |
| 03. | செல்வி. ஜ. சந்திரிக்கா | 1st | 1st |
| 04. | செல்வி. சி. மிசியானா | 1st | - |

## Dictation ( சொல்வதெழுதல் )

| | | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| 01. | செல்வி. ஜெ. லிசாளினி | 1st | 1st |
| 02. | செல்வி. கு. நிதுஷா | 1st | - |
| 03. | செல்வி. க. சிவகலை | 2nd | - |
| 04. | செல்வி. கு. மாதுமை | 1st | 2nd |
| 05. | செல்வி. நா. ரம்யா | 3rd | - |
| 06. | செல்வி. பா. லக்ஷனா | 1st | 2nd |
| 07. | செல்வி. க. வர்ணிகா | 3rd | - |
| 08. | செல்வி. யோ. தபீத்தா | 1st | - |

## Creative writing ( சுய ஆக்கம் )

| | | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| 01. | செல்வி. கு. மாதுமை | 2nd | - |
| 02. | செல்வி. பா. லக்ஷனா | 2nd | - |
| 03. | செல்வி. க. ஆர்த்திகா | 3rd | - |
| 04. | செல்வி. க. வர்ணிகா | 2nd | - |
| 05. | செல்வி. த. அருந்துஷா | 1st | 2nd |

## Recitation ( கவிதை சொல்லுதல் )

| | | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| 01. | செல்வி. ம. மதுமிதா | 1st | - |
| 02. | செல்வி. பு. தேனுகா | 2nd | - |
| 03. | செல்வி. பா. சௌமியா | 2nd | 2nd |

**Oratory - Prepared ( கவிதை சொல்லுதல் )**

| | | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| 01. | செல்வி. சு. சுபஹரி | $2^{nd}$ | - |
| 02. | செல்வி. சி. மயூரி | $3^{rd}$ | - |
| 03. | செல்வி. பு. ஆரணி | $1^{st}$ | - |

**Oratory - Impromtu ( எழுந்தமான பேச்சு )**

| | | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| 01. | செல்வி. ரா. அகிலா | $1^{st}$ | - |

**Story telling ( கதைசொல்லுதல் )**

| | | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| 01. | செல்வி. யோ. சாம்பவி | $2^{nd}$ | $2^{nd}$ |
| 02. | செல்வி. பு. தேனுகா | $1^{st}$ | - |
| 03. | செல்வி. ச. டிலக்ஷனா | $3^{rd}$ | - |
| 04. | செல்வி. பா. ஆரணி | $1^{st}$ | - |
| 05. | செல்வி. உ. நிவேதா | $3^{rd}$ | - |

**Solo acting**

| | | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| 01. | செல்வி. சி. கௌசிகா | $2^{nd}$ | - |
| 02. | செல்வி. பு. ஆரணி | $2^{nd}$ | - |

| **Roleplay** | வலயமட்டம் | மாகாணமட்டம் |
|---|---|---|
| **Year - 6** | **$2^{nd}$** | - |
| **7** | **$1^{st}$** | **$3^{rd}$** |

| | | |
|---|---|---|
| **8** | **1st** | - |
| **9** | **1st** | **3rd** |
| **10** | **3rd** | - |
| **11** | **2nd** | - |

| **Group Singing** | வலயமட்டம் | மாகாணமட்டம் |
|---|---|---|
| **Junior** | **1st** | **3rd** |
| **Senior** | **1st** | - |

| **Drama** | வலயமட்டம் | மாகாணமட்டம் |
|---|---|---|
| **Junior** | **1st** | - |
| **Senior** | **2nd** | - |

| | வலயமட்டம் | மாகாணமட்டம் |
|---|---|---|
| **Debate** | **2nd** | - |

க.பொ.த உயர்தர மாணவர் மன்றம்

கடந்த வருடம் இம்மன்றம் 12வது "ஒளியை நோக்கி சஞ்சிகையை வெளியிட்டது. மாணவர்களது திறன்கள், தேடல்கள், ஆளுமைகளின் சிறப்பான வெளிப்பாடாக இம்மலர் மிளிர்ந்தது. புதன்கிழமை தோறும் உயர்தர மாணவரின் திறன்களை வெளிப்படுத்தும் நோக்கில் பேச்சுப்போட்டி, கவியரங்கம், விவாதஅரங்கம் போன்ற சிறப்பு நிகழ்வுகளை நிகழ்த்தி மாணவர்களை பொறுப்பாசிரியர்கள் உற்சாகமூட்டுகின்றனர். எமது பாடசாலையின் பழைய மாணவி பொறியியலாளர் செல்வி T. சாந்தாதேவி வருடாந்த ஒன்றுகூடலில் முதன்மை விருந்தினராகக் கலந்து மாணவர்களை உற்சாகப்படுத்தினார். இவரது கல்விப்புலச் செறிவும் தற்போது இவர் பொறுப்பேற்று நடாத்தும் வேலைத்திட்டங்களின் செயற்பாடும் மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் அம்சமாக அமைந்தள்ளது.

**சாரணியம் -**

வெள்ளிக்கிழமைகளில் சாரணியப் பொறுப்பாசிரியர் செல்வி கலாமதி தெய்வநாயகத்துடன் புதிதாக இணைந்த பழைய மாணவிகளான எம் ஆசிரியர்கள் திருமதி சி. சந்திரகுமார், திருமதி. மேசி டேவிட்றாஜ் ஆகியோரும் இணைந்து மாணவரது செயற்பாடுகளுக்கு ஊக்கம் அளிக்கின்றனர். கடந்த வருடம் யா/ கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கொழும்பு தலைமை செயலக பெண்சாரணிய ஆணையாளர்களின் வழிகாட்டலுடன் 25' X 20' விஸ்தீரணத்தில் நூல் நிலையத்தை அமைக்க தம்மால் இயன்ற சரீர உதவிகளை எமது பாடசாலைச் சாரணியர்கள் வழங்கினர். அதே போன்று அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையிலும் நூலகம் அமைக்கும் செயற்பாட்டில் தம் முழுமையான பங்களிப்பை எம் சாரணியர் வழங்கினர். அகில இலங்கைச் சாரணியர்களுக்கிடையே நடந்த கலாசார விழாவில் மாகாணமட்டத்தில் எம் சாரணிய நடனக்குழு (கரகாட்டம்) முதலிடத்தை பெற்று பண்டாரவளையில் நடந்த தேசியமட்டப் போட்டியில் நான்காம் இடத்தையும் பெற்றது.

**கணித விஞ்ஞான மன்றம்.**

இடைநிலைக்கல்வியை மேம்படுத்தும் நோக்கில் எமது ஆசிரியர்கள் தரவட்டங்களூடாக தமது பிரச்சினைகளை இனங்கண்டு மாணவர்களது கற்றல், கற்பித்தல் இடர்பாடுகளை களைந்து க. பொ.த சாதாரணப் பரீட்சையில் சிறப்பான சித்தி வீதத்தைப் பெற ஊக்குவிப்பதோடு வலய, மாகாண மட்ட கணித விஞ்ஞானப் போட்டிகளிலும் புத்தாக்கப்போட்டிளிலும் முழுமையான

க. முகுந்தன் அவர்களது வழிகாட்டலின் கீழ் அனைத்து விஞ்ஞான ஆசிரியர்களும் ஒருங்கிணைந்து விஞ்ஞான போட்டிகளில் மாணவர்கள் பங்கு கொள்ளவும், விஞ்ஞான செய்முறைகளில் அதீத ஆர்வத்துடன் பங்குகொள்ளவும் ஊக்குவிக்கின்றனர்.

**கல்விச்சுற்றுலா.**

கடந்த வருடம் இடைநிலைப் பிரிவு மாணவர்கள் எமது பிரிவுத் தலைவர் திருமதி வசந்தா வேலும்மயிலும் தலைமையில் யாழ்ப்பாண குடாநாட்டின் வரலாற்று புகழ்பெற்ற இடங்களுக்கும், சமயத்தலங்களுக்கும் சுற்றுலா சென்று நேரடிக் கற்றல் அனுபவங்களைப் பெற்றனர். 521 பிரிகேட் இராணுவத்தினரின் உதவியுடன் எமது 10 மாணவர்கள் சிறுவர்தினத்தன்று கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டு பாராளுமன்றம், மிருகக்காட்சிச் சாலை போன்ற இடங்களை பார்வையிடும் சந்தர்ப்பமும் சிறுவர்தின நிகழ்வில் கலந்துகொள்ளும் சந்தர்ப்பமும் கிடைத்தது.

**உலக உணவுத்திட்டம்.**

கடந்த வருடம் எமது மாணவர்களுக்கு சுகாதாரமான முறையில் சமைப்பதற்கு ஒரு சமையலறை அமைக்கப்பட்டது. எனினும் அது எமது பயன்பாட்டுக்கு போதுமானதாக அமையவில்லை. தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையான மாணவர்களுக்கு பெற்றோரின் ஒத்துழைப்புடன் காலை, மதிய உணவு உரிய நேரத்தில் வழங்கப்படுகின்றது.

பொறுப்பாசிரியர்கள்:- திருமதி. சு. சிவகணேசன்
திருமதி. மா. குகன்

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

எமது பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் பாடசாலையின் செயற்பாடுகளை ஊக்குவித்து பாடசாலை முகாமைத்துவத்திற்கு எப்பொழுதும் பக்கபலமாக இயங்கி வருகின்றது. கடந்த வருடம் நிர்வாகக்குழு உறுப்பினருடன் பெற்றோர்களும் இணைந்து 10.06.2011 - 16.06.2011 வரை நடந்த நவோதய வாரத்தில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு மகிழ்ச்சிகரமான கற்றலுக்குரிய கவிநிலையை ஏற்படுத்துவதற்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்கினர். விசேட பொதுக்கூட்டங்களுக்கு வருகை தந்து மாணவரது கற்றல், கற்பித்தல் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு தமது பங்களிப்பை வழங்குகின்றனர். செயலாளரும் நிர்வாக குழு உறுப்பினரும் மாதாந்த கூட்டங்களுக்கு வருகை தந்து தமது ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குகின்றனர். Unicef திட்டத்தின் மூலம் சிறு திருத்தத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் சிறப்பான வேலைகளையும் மேற்கொண்டனர். வருடாவருடம் ஒக்டோபர் 06 ந் திகதி பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து சிறந்த அர்ப்பணிப்புடனும் சேவைமனப்பாங்குடனும் கடமையாற்றும் எம் ஆசிரியர்களுக்கு விழா எடுத்து கௌரவிக்கின்றனர். அத்துடன் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா என்பவற்றுடன் மாணவர்கள் மாகாணமட்டத்தில் பரிசு பெறும் சந்தர்ப்பங்களில் அவர்களை ஊக்குவித்து எமக்கு ஆதரவாக இயங்கி வருவதால் நாம் பெருமையடைகின்றோம். பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையினர் எமது பாடசாலையின் விளையாட்டு அபிவிருத்திக்காக விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு ரூ25000

பெறுமதியான காசோலையினை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

### பாடசாலை அபிவிருத்திச் சபை
### ( School Development Committee)

பாடசாலைப் பயனாளிகளுடனான ஒன்றிணைந்த பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் பெற்று சிறந்த கற்றல் சூழலையும் பௌதீகவள விருத்தியையும் ஏற்படுத்தும் நோக்கில் அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டுள்ளது.

### பழைய மாணவர் சங்கம் / இராமச்சந்திரன்.

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவனினும் நனிசிறந்ததுவே என்ற பாரதியின் கூற்றுக்கு இணங்க தமது அறிவுக் கண்ணைத் திறந்த எம் மெதடிஸ்த மாதாவின் பௌதீக, பண்பாட்டு வளர்ச்சிக்கு எப்பொழுதும் எமது தாய்ச்சங்கம், கொழும்பு, கனடா, அவுஸ்ரேலியா, லண்டன் பழைய மாணவர் சங்கங்கள் எமது தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்கின்றன. கடந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் ரூ 8 இலட்சம் பெறுமதியான அழகிய நுழைவாயிலும் முகப்பும் கனடா பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டன. பழைய மாணவனாகிய ஜேர்மன் நாட்டில் வசிக்கும் Iran Kiruharan அவர்களால் வழங்கிய பஸ் வண்டியின் தரிப்பிடம் அமைக்க (5.5 இலட்சம்) எமது அவுஸ்ரேலியா பழைய மாணவர் சங்கம் நிதி வழங்கியுள்ளது. UMCOR நிறுவனத்தின் நிதிஉதவியுடன் அமைக்கப்பட்ட சுற்றுமதில் பூச்சுக்குரிய ( 4 இலட்சம் ) நிதியினை அவுஸ்ரேலியா பழைய மாணவர் சங்கம் வழங்கியுள்ளது. இன்றைய பரிசளிப்பு

விழாவில் செலவீனத்தின் பெரும்பகுதியினைச் இச் சங்கம் பொறுப்பேற்றுள்ளது. கொழும்பு கிளைச் சங்கமும் தாமும் சளைத்தவர்களல்ல என்பதை நிரூபிப்பதற்கு நிர்மானிக்கப்பட்ட சுற்றுமதில் பூச்சுக்கு மேலும் ரூ 50000/= வழங்கினர். கடந்த வருடம் ஆய்வு கூடங்களுக்கு தேவையான உபகரணங்கள், குளிரூட்டி என்வற்றை கனடா பழைய மாணவர் சங்கம் எமக்கு வழங்கியது. அத்துடன் அதே சங்கம் எமது ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்று மேசைப்பந்தாட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவியாக மேசைப்பந்தாட்ட உபகரணத் தொகுதிகளை வழங்கியது. லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் தலைவி 2011ம் ஆண்டு திருமதி திரௌபதி ஜெயந்திரன் வழமை போல தனது சொந்த நிதியில் ரூ 25000/= எம் விளையாட்டு விழாவிற்கு வழங்கி உதவிவருகின்றார். அதே போன்று திருமதி இ. பாஸ்கரன் அவர்களும் தனது சொந்த நிதியினை எமது தேவைகளுக்கு ஏற்ப காலத்திற்கு காலம் வழங்கி எமக்கு எப்பொழுதும் ஆதரவு வழங்குவதை நாம் நினைவு கூராமல் இருக்க முடியாது. கடந்த வருடம் February மாதம் எமது பாடசாலைக்கு விஜயம் செய்த ஜேர்மன் செனட்டரான எமது பழைய மாணவன் திரு Iran Kiruharan அவர்கள் எமது வேண்டுகோளை ஏற்று எம் பாடசாலையின் பயன்பாட்டிற்கு ரூ 3 மில்லியன் பெறுமதியான மிகச்சிறந்த பஸ்வண்டியொன்றை எமக்கு வழங்கியுள்ளார். April 8 இல் அவரின் பிரதிநிதியான ஜேர்மன் தூதுவர் திரு Jen Plotner அவர்களும் TATA பஸ்நிறுவனத்தின் முகாமையாளரும் கொழும்பில் உள்ள ஜேர்மன் தூதரகத்தில் எமக்கு பஸ்வண்டிக்கான திறப்பை கையளித்து என்னுடன் வருகை தந்த ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும்

விருந்துபசாரம் அளித்து கௌரவித்தமை எம் பழைய மாணவனால் எமக்கு கிடைத்த மிகப் பெரிய கௌரவம் ஆகும்.

**முடிவுரை**

எமது மாணவர்களுக்கு பெற்றோர் , பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவுடன் பிள்ளைநேயச்சூழலை எம் பாடசாலையில் உருவாக்கி பாடசாலையின் உள்ளகச் செயற்பாட்டை வலுவூட்டி பிரதிஅதிபர், பகுதித்தலைவர், ஆசிரியர்கள், மாணவத்தலைவர்கள், கல்விசாரா ஊழிர்களுடன் இணைந்து கற்றல் கற்பித்தல் இணைப்பாட விதான செயற்பாடுகளில் மாணவரின் உயர்சாதனை மட்டத்தை எம் பாடசாலை உறுதிப்படுத்துகின்றது. பாடசாலை மேம்பாட்டுக் குழு, பாடசாலை முகாமைக்குழுவின் செயற்பாடுகளில் நிதிப்பயன்பாடுகளின் வெளிப்படைத்தன்மை, சமூகத்தின் ஒத்துழைப்பு என்பற்றினால் பாடசாலையின் விளைதிறன் தொடர்ச்சியாக உயர்வடைகின்றது. வடமராட்சி கல்வி வலயத்தின் பெருமையை எமது மாணவர்களும் ஆசிரியர்களும் தமது செயற்பாடுகளினால் நிலைநாட்டிக் கொண்டிருக்கும் அதே வேளை எம்க்கு எப்போதும் தமது நிபுணத்துவ ஆலோசனை வழங்கிய முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் மதிப்புக்குரிய திரு. வை. செல்வராசா அவர்களுக்கும் தற்போதைய வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. சி. நந்தகுமார் அவர்களுக்கும் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கட்டிட பொறியியலாளர், கணக்காளர் அவர்களுக்கும் எம் நன்றிகள். அத்துடன் இவர்களது தொடர் வழிகாட்டல் மூலம் ஆரோக்கியமான அறிவுசார் சமூகத்தை உருவாக்குவதில் நாம்

பெருமையடைகின்றோம். இன்றைய நிகழ்வின் முதன்மை விருந்தினரான தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. கு. பிறேமகாந்தன், அவரது துணைவியார் திருமதி. றஞ்சிதமலர் பிறேமகாந்தன் சகிதம் இவ்விழாவில் கலந்து மாணவர்களுக்கு பரிசில் வழங்கி நிகழ்வை சிறப்பித்துள்ளனர். இவ்வாறான பாடசாலைச் சமூகத்தின் அளப்பரிய பலமே கல்வியில் தரஉறுதிப்பாட்டை நாம் நிலைநாட்ட உதவுகின்றது. இவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகள்.

எமது பழைய மாணவர்சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், நிறுவன அதிகாரிகள் வங்கி முகாமையாளர்கள், வர்த்தகர்கள், பெற்றோர்கள், முன்னாள் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் என் சிரம் தாழ்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

நன்றி

வணக்கம்

